**செய்தி வெளியீடு எண்: 028** **நாள்: 10.01.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (10.1.2019) தலைமைச் செயலகத்தில், உள்துறை சார்பில் தேனி மாவட்டம், தேவதானப்பட்டியில் 5 கோடியே 77 லட்சத்து 83 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 46 காவலர் குடியிருப்புகள் மற்றும் 7 கோடியே 2 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள தேனி மாவட்ட சிறைச்சாலை ஆகியவற்றை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 76 கோடியே 48 லட்சத்து 28 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 294 காவலர் குடியிருப்புகள், 6 காவல் நிலையங்கள், 9 காவல் துறை கட்டடங்கள், 2 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையக் கட்டடங்கள், 30 சிறைத்துறை குடியிருப்புகள் மற்றும் 44 சிறைத்துறை கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாப்பது, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தக்க தண்டனை பெற்றுக் கொடுப்பது போன்ற பல்வேறு முக்கிய பணிகளை காவல்துறை ஆற்றி வருகின்றது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காவல்துறையின் பணிகள் மேலும் சிறக்க, புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளைக் கட்டுதல், காவல்துறை அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ரோந்து பணிகளை மேற்கொள்ள புதிய வாகனங்களை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தேனி மாவட்டம், தேவதானப்பட்டியில் 5 கோடியே 77 லட்சத்து 83 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 46 காவலர் குடியிருப்புகள் மற்றும் 7 கோடியே 2 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள தேனி மாவட்ட சிறைச்சாலை ஆகியவற்றை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், அரியலூர் ஆயுதப்படை வளாகத்தில் 100 குடியிருப்புகள், கோயம்புத்தூர் மாநகர் – காந்திபுரத்தில் 32 குடியிருப்புகள், தருமபுரி மாவட்டம் – மகேந்திரமங்கலத்தில் 30 குடியிருப்புகள், திண்டுக்கல் மாவட்டம் – பழனி தாலுகாவில் 16 குடியிருப்புகள்,

இராமநாதபுரம் மாவட்டம் – கேணிக்கரையில் 28 குடியிருப்புகள், திருவாரூர் மாவட்டம் – திருவாரூரில் 6 குடியிருப்புகள் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் – தமிழ்நாடு சிறப்பு காவல் 9–ஆம் அணிக்காக மணிமுத்தாறில் 82 குடியிருப்புகள், என 31 கோடியே 6 லட்சத்து 54 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 294 காவலர் குடியிருப்புகள்;

கடலூர் மாவட்டம் – கருவேப்பிலங்குறிச்சி, கிருஷ்ணகிரி மாவட்டம் – ஊத்தங்கரை, மதுரை மாவட்டம் – கூடல்புதூர், திருவள்ளூர் மாவட்டம் – காட்டூர் ஆகிய இடங்களில் 4 காவல் நிலையங்களும், கடலூர் மாவட்டம் – சிதம்பரம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் – முசிறி ஆகிய இடங்களில் 2 போக்குவரத்து காவல் நிலையங்களும், என 3 கோடியே 81 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 காவல் நிலையங்கள்;

கோயம்புத்தூர் மாவட்டம் – கோவை மாநகர காவல் ஆணையர் அலுவலக இணைப்புக் கட்டடம், சென்னை – புரசைவாக்கத்தில், தேசிய பாதுகாப்பு பிரிவிற்கான பாளையம் மற்றும் அம்பத்தூர் – காவல் இணை ஆணையர் (மேற்கு மண்டலம்) நிர்வாகக் கட்டடம், இராமநாதபுரம் மாவட்டம் – இராமநாதபுரத்தில் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அலுவலகக் கட்டடம் மற்றும் காவல் கட்டுப்பாட்டு அறை, திருவள்ளூர் மாவட்டம் – கனகவல்லிபுரத்தில் காவலர் பயிற்சிப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம், காவலர் பயிற்சிப் பள்ளிக்கான பாளையம், பயிற்றுநர் ஓய்வு இல்லம் மற்றும் அலுவலகக் கட்டடம், என 25 கோடியே 18 லட்சத்து 42 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 9 காவல்துறை கட்டடங்கள்;

இராமநாதபுரம் மாவட்டம் – முதுகுளத்தூர் மற்றும் விருதுநகர் மாவட்டம் – விருதுநகர் ஆகிய இடங்களில் 2 கோடியே 19 லட்சத்து 29 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையங்கள்;

கோயம்புத்தூர் மாவட்டம் – கோயம்புத்தூர் மத்திய சிறையில் 3 கோடியே 73 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 30 சிறைத்துறை குடியிருப்புகள்;

நாகப்பட்டினம் மாவட்டம் – சீர்காழியில் சீரமைக்கப்பட்ட கிளை சிறை மற்றும் திருப்பூர் மாவட்டம் – திருப்பூரில் மாவட்ட சிறைகள் மற்றும் 42 சிறைத்துறை குடியிருப்புகள், என 10 கோடியே 49 லட்சத்து 27 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 44 சிறைத்துறை கட்டடங்கள்;

என மொத்தம், 89 கோடியே 29 லட்சத்து ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை மற்றும் சிறைத்துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி. சண்முகம், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. டி.கே. ராஜேந்திரன், இ.கா.ப., சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் திரு. ஏ.கே.விசுவநாதன், இ.கா.ப., தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை இயக்குநர் திரு.கே.பி. மகேந்திரன், இ.கா.ப., சிறைத்துறைத் தலைவர் திரு. அசுதோஷ் சுக்லா, இ.கா.ப., தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு.ம. நா. மஞ்சுநாதா, இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 10.1.2019**